# கல்வி உதவிக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல் 2020

இறைஇயேசுவில் அன்பான அருட்பணியாளர்களே, அ.மு.ச.வினரே, பேரவையினரே!

நமது பிள்ளைகள் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்கள். பலரும் எங்கு செல்வது எது எப்படி என்றெல்லாம் யோசித்து முடிப்பதற்குள் 12ம் வகுப்புத் தேர்ச்சி முடிவுகள் வெளியாகியுள்ளன. மேலும் எல்லாரும் 20-07-2020 நாளிலிருந்து இணையவழியாக விண்ணப்பங்கள் அனுப்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. உயர்கல்விக்கு ஏங்கும் நம் பிள்ளைகளுக்கு சரியான வழிகாட்டுதலைத் தருவோம். கொரோனா தொற்று நேரத்தில் முன் அனுபவமில்லாத இணையவழி விண்ணப்பம் பற்றி பெற்றோருக்கு எடுத்துக்கூறி பிள்ளைகளுக்கு உயர்கல்விக்கான இருக்கைகளைப் பெற உதவுங்கள்.

நமது பங்குகளும், கிளைப்பங்குகளும் வழிபாடுகளுகம் வருமானமும் இல்லாத நேரத்திலும் உதவி செய்யக் கடமைப் பட்டுள்ளோம். முடிந்தவரை படிப்பதற்கான இடங்களைப் பெற்றுத்தர முயலுங்கள். தேவைப்பட்டால் கல்வி நிறுவனங்களுக்கு நீங்களே சென்று பரிந்து பேசுங்கள். முடிந்தவரை பொருளுதவி செய்யுங்கள். பிறர் வழங்கும் உதவிகளைப் பெற்றுக்கொடுங்கள். ஒவ்வொரு அ.மு.ச.வும் பேரவையும் இப்பணியைக் கட்டாயம் செய்ய அன்போடு வேண்டுகிறேன்.

வழக்கம்போல இவ்வருடமும் நமது மறைமாவட்டம் தனதுப் பல்வேறு நிறுவனங்கள் வழியாக வழங்கும் உதவிகளைக் கீழே பட்டியலிடுகின்றேன். இவ்வுதவிகளைப் பெற கீழுள்ள வழிகாட்டுதல் உதவும். இந்த வழிகாட்டுதலின்படி விண்ணப்பிக்க வேண்டுகிறேன்.

### I. தூய சவேரியார் பெறியியல் கல்லூரி:

இக்கல்லூரியில் இவ்வருடம் Mechnical, Civil, EEE, IT, ECE, CSE ஆகிய துறைகளில் 2 இருக்கைகள் வீதம் இலவச இருக்கைகளாக வழங்கப்பட உள்ளன. இதில் தேர்வு செய்யப்படுபவர் கணிதப் பாடத்தில் 65 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். தேர்வு செய்யப்படுபவர் சில கட்டணங்களை செலுத்த வேண்டியதில்லை. இதற்காக ஒவ்வொரு பங்கும் கிளைப்பங்குகளையும் இணைத்து பங்குக்கு ஒரு ஏழை மாணாக்கரைத் தேர்வு செய்து மறைமாவட்டம் தந்துள்ள படிவத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

தூய சவேரியார் பொறியியல் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் அரசின் Counselling லும் கலந்துகொள்வது சிறப்பாகும்.

### II. தூய சவேரியார் தாதியர் கல்லூரி:

மறைமாவட்டத்திற்கு 10 கட்டணச் சலுகை இருக்கைகள் வழங்கப்படும். இவ்வுதவி பெற விண்ணப்பிப்பவர் இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் அல்லது உயிரியல் பாடங்களில் 70 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். பெற்றோரை இழந்த மற்றும் SC/ST மாணாக்கருக்கு 10 மதிப்பெண் வரை சலுகை வழங்கப்படும். பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இவ்வுதவி பெற வேண்டியவர் தேர்வுசெய்யப் படுவார். தேர்வு செய்யப்படுபவர் கல்விக் கட்டணத்தில் ரூபாய் 60,000 ஆண்டொன்றுக்குச் சலுகை பெறுவார். இதரக் கட்டணங்களை முறைப்படி செலுத்த வேண்டும். SC/ST மாணாக்கர் உட்பட அனைத்து மாணாக்கரும் அ.மு.ச. வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பு : கத்தோலிக்க SC, ST மாணாக்கருக்கு அரசு கல்வி உதவித்தொகை வழங்குவதால் மறைமாவட்டக் கட்டணச் சலுகை இட ஒதுக்கீட்டின் கீழ் வருவதில்லை. கத்தோலிக்க **வண்ணார், நாவிதர் மாணாக்கர்கள்** அரசு கல்வி உதவித்தொகை பெற முடியாததால் அவர்கள் இவ்வுதவிக்கு **விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்.**

### III. மார்னிங் ஸ்டார் தொழில்நுட்பக் கல்லூரி:

இவ்வருடம் மறைமாவட்டத்திற்கு 26 கட்டணச் சலுகை இருக்கைகள் வழங்கப் படுகிறது. மெக்கானிக்கல் நீங்கலாக உள்ள 4 துறைகளிலும் வட்டாரத்திற்கு ஒருவர் வீதமும், மெக்கானிக்கல்

துறைக்கு மறைமாவட்டத்திற்கு இருவரும் உதவிக்குத் தேர்வு செய்யப்படுவர். பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இவ்வுதவி பெற வேண்டியவர் தேர்வு செய்யப்படுவார். தேர்வு செய்யப்படுபவர்கள் சில கட்டணங்களைச் செலுத்த வேண்டிய தில்லை. நேரடியாக 2-ம் ஆண்டில் இணைந்து படிப்பவர் இவ்வுதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

**IV. தூய போப் ஜாண் பால் 2 கல்வியியல் கல்லூரி**

மறைமாவட்டத்திற்கு 3 கட்டணச் சலுகை இருக்கைகள் வழங்கப்படும். அதில் 1 SC/ST மாணாக்கருக்கு வழங்கப்படும். பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இவ்வுதவி பெற வேண்டிய மாணாக்கர் தேர்வு செய்யப்படுவார். தேர்வு செய்யப்படுபவர் கல்விக் கட்டணத்தில் ரூபாய் 37,500 ஆண்டொன்றுக்குச் சலுகை பெறுவார். இதரக் கட்டணங்களை முறைப்படிச் செலுத்த வேண்டும். SC/ST மாணாக்கர் உட்பட அனைத்து மாணாக்கரும் அ.மு.ச. வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**V. FRIENDS ITI:**

மறைமாவட்டத்திற்கு 4 கட்டணச் சலுகை இருக்கைகள் வழங்கப்படும். பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இவ்வுதவி பெற வேண்டியவர் தேர்வு செய்யப்படுவார். தேர்வு செய்யப்படுபவர் சில கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை.

**VI. தூய அந்தோணியார் திருத்தலப்பங்கு கல்வி உதவி:**

இத்திட்டத்தில் இவ்வருடம் பங்கு மற்றும் கிளைப்பங்கு இணைந்து ஒரு நபரைத் தேர்வு செய்து பரிந்துரைக்கலாம். 2 வருடப் படிப்புகளும் அதற்கு மேலும் படிப்பவர்கள் (I.T.I. to M.B.B.S.) விண்ணப்பிக்கலாம். படிப்புகளுக்கு ஏற்ப உதவி வழங்கப்படும். எச்சூழலிலும் வருடத்திற்கு 10000 ரூபாய்கு மேல் உதவி வழங்கப்படாது. மறைமாவட்டம் தந்துள்ள படிவத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**VII. கிட்ஸ் கல்வி உதவி:**

இத்திட்டத்தில் இவ்வருடம் பங்கு மற்றும் கிளைப்பங்கு இணைந்து ஒரு நபரைத் தேர்வு செய்து பரிந்துரைக்கலாம். 2 வருடப் படிப்புகளும் அதற்கு மேலும் படிப்பவர்கள் (I.T.I. to M.B.B.S.) விண்ணப்பிக்கலாம். படிப்புகளுக்கு ஏற்ப உதவி வழங்கப்படும். எச்சூழலிலும் வருடத்திற்கு 10000 ரூபாய்கு மேல் உதவி வழங்கப்படாது. மறைமாவட்டம் தந்துள்ள படிவத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**VIII. முளகுமூடு வட்டார கத்தோலிக்க நிதி நிறுவனக் கல்வி உதவி:**

முளகுமூடு, காரங்காடு, மாத்திரவிளை வட்டாரங்களிலுள்ள ஒவ்வொரு அ.மு.ச.வும் இவ்வருடம் கல்லூரியில் சேர்ந்து கலை & அறிவியல் பாடங்கள், I.T.I., Diploma, B.Ed, Engineering, Nursing பாடங்களை தேர்ந்தெடுத்துப் படிக்கும் ஒருவருக்கு இவ்வுதவியைப் பெற்றுக்கொள்ள முடியும். இத்திட்டம் ஒரு மாணாக்கருக்கு ரூபாய் 5,000 முதல் ரூபாய் 10,000 வரை வழங்குகிறது. இதற்காக ஒவ்வொரு அ.மு.ச.வும் 1 நபரைத் தேர்வு செய்து மறைமாவட்டம் தந்துள்ள படிவத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**IX. விளவங்கோடு தன்னிறைவு நிதிச்சேவை நிறுவனக் கல்வி உதவி:**

திருத்துவபுரம், புத்தன்கடை, வேங்கோடு வட்டாரங்களிலுள்ள ஒவ்வொரு அ.மு.ச.வும் இவ்வருடம் கல்லூரியில் முதலாம் ஆண்டில் சேர்ந்து கலை & அறிவியல் பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் ஒருவருக்கு இவ்வுதவியைப் பெற்றுக்கொள்ள முடியும். இத்திட்டம் ஒரு மாணாக்கருக்கு ரூபாய் 5,000 வழங்குகிறது. இதற்காக ஒவ்வொரு அ.மு.ச.வும் 1 மாணாக்கரைத் தேர்வு செய்து மறைமாவட்டம் தந்துள்ள படிவத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**மிக முக்கியமானவை:**

பங்குப்பணியாளர்கள் ஆலயத்தில் இத்தகவல் பற்றி எடுத்துக்கூற முடியாதச் சூழலில் உள்ளோம். ஆகவே அ.மு.ச. உறுப்பினர்கள் வழியாக அந்தந்த அன்பியங்களில் உள்ள மாணாக்கருக்குத் தகவல் தருவோம். ஏழைப் பிள்ளைகள் இத்திட்டங்களில் விண்ணப்பிக்க உதவுவோம். அ.மு.ச. (தேவையெனில் பங்குப்பேரவை இணைந்த) கூட்டத்தில் வைத்து பயனாளிகளைத் தேர்வு செய்த பின்னர் அம்மாணாக்கருக்கு அச்சிடப்பட்ட மறைமாவட்ட விண்ணப்பப் படிவம் வழங்க வேண்டும். அனைத்தையும் சரியாக பூர்த்தி செய்து இணைக்கப்பட வேண்டிய நகல்களை இணைத்து விண்ணப்பங்கள் பெறப்பட வேண்டும். பெறப்படும் விண்ணப்பப் படிவத்தில் அம்மாணாக்கரின் ஏழ்மை நிலை குறித்து எழுதப்பட வேண்டியவற்றை அ.மு.ச. எழுத வேண்டும். பின்னர் அவ்விண்ணப்பத்தின் பின்னால் அ.மு.ச. (தேவையெனில் பேரவை) நிர்வாகிகள் கையொப்பமிட்டு கிட்ஸில் ஒப்படைக்க வேண்டும். ஒரே அ.மு.ச. வைச் சார்ந்தவர்கள் தனித்தனியாகக் கொண்டுவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகவே பங்களவில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பங்களைச் சேர்த்து அ.மு.ச. கிட்ஸில் ஒப்படைப்பது பேருதவியாக இருக்கும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதிநாள் சலுகை இருக்கை பெறவேண்டிய I. தூய சவேரியார் பொறியியல் கல்லூரி 12-08-2020, II. தூய சவேரியார் தாதியர், III. மார்னிங் ஸ்டார் தொழில் நுட்பம், IV. போப் ஜாண்பால் 2 கல்வியியல் கல்லூரிகள் 24-08-2020, பிற அனைத்தும் 01-09-2020.

குறிப்பு:-

1. படிவம் தேவைப்படுபவர்கள் நகல் எடுத்துக்கொள்ள வேண்டும்.
2. அந்தந்த நிறுவனங்களின் வழிகாட்டுதலின்படி மாணாக்கர் இறுதி செய்யப்படுவர்.
3. பரிந்துரைக்கப்படும் நபர்களை கிட்ஸ் ஆய்வு செய்து தேர்வு செய்யும்.

தோழமையுடன்

கிட்ஸ் செயல் இயக்குநர்